## சுருக்கம்

பாதாள சாக்கடைத் திட்டம் - ஆவடி நகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும் ரூ.479 இலட்ச செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (நிலை) எண். 62 நாள் : 12.04.2008

படிக்க:

1. ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்திற்கான மாநில அளவிலான வழிப்படுத்தும் குழுவின் 20.11.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு.
2. மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் 29.02.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு.
3. நகராட்சி நிர்வாக ஆணையாளரின் கடித எண்.50573/2006/UGSS2 நாள் 31.03.2008

----

**ஆணை :**

முதலாவதாகப் படிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்திற்கான மாநில அளவிலான வழிப்படுத்தும் குழுக்கூட்டத்தில் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில், ஆவடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் தயார் செய்யப்பட்ட ரூ.158.05 கோடி மதிப்பிலான விரிவான திட்ட அறிக்கை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் மூலம் மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் (Central Sanctioning and Monitoring Committee) கூட்டத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அக்கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆவடி நகராட்சியில் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், ரூ.4.79 கோடி செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் பின்வரும் நிதிப் பகிர்வின் அடிப்படையில், கடன் மற்றும் மானியமாக ரூ.79.02 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மானியம் (40%) ரூ.63.22கோடி

வட்டியில்லா கடன்(10%) ரூ.15.81கோடி

சொந்த நிதி / நிறுவன பங்கு ரூ.79.02கோடி

2. ஆவடி நகராட்சி நகர்மன்றமும் தனது தீர்மான எண்: 1214, நாள் 26.03.2008-ல் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இத்திட்டத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன் அடிப்படையில் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் இப்பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவை அரசிற்கு அனுப்பியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, ஆவடி நகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும் ரூ.473 இலட்சம் செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5
ஆணையர், ஆவடி நகராட்சி, (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை – 9/18/35.
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை –108
நகல்
நிதித்துறை, சென்னை –9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந2/பொது)துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.